தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

பணியமைப்பு – நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நகராட்சிகளின் முக்கியமான கணக்கு வழக்கு சம்பந்தமான அலுவல்களை கணிப்பொறிமூலம் செயல்படுத்த கூடுதல் பணியிடங்கள் தோற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நட1)துறை**

**அரசு ஆணை (நிலை)எண்.201** **நாள்: 30.10.1998.**

படிக்கப்பட்டது:

நகராட்சி நிர்வாக ஆணையர் நேர்முகக் கடித எண்.80601/96/ஜெ4, நாள்.23.6.1998 மற்றும் நாள்.20.7.1998.

......

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அனைத்து நகராட்சிகளுக்கும் தேவையான கணிப்பொறி இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் கணிப்பொறி இயக்குவதற்கு தேவையான (Software) தயாரிப்பை இந்திய மின்னணுவியல் இணையத்திடம் (Electronics Corporation of India) ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும் இத்திட்டத்தின் செயல்பாடுகள் பரிச்சார்த்தமாக தாம்பரம் நகராட்சியில் பரிசீலிக்கப்பட்டது என்றும், மற்ற அனைத்து நகராட்சிகளிலும் கணிப்பொறி இயந்திரங்கள் வைக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காகவும், பணியாளர்களுக்கு இதற்கான அடிப்படை பயிற்சி அளிக்கவும் கணிசமான முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இத்திட்டத்தின்கீழ் தற்பொழுது நடைமுறையில் உள்ள கையிருப்பு நிதிமுறையிலிருந்து வசூல் தொகை முறைக்கு (Cash based to accrual based) மாற்றம் செய்வதற்கு, பதிவேடுகளை தயாரிப்பதற்கும் புதிய கணக்குகள் தயார் செய்வதற்கும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இம்மாநிலத்தில் நகர்ப்புற மக்களுக்கு சேவை செய்வதை விரைவுப்படுத்தவே இவ்வாறு உள்ளாட்சி அமைப்புகளில் கணிப்பொறி மூலம் கணக்கு வழக்குகளை செயல்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதலில் உள்ளாட்சிகளின் கணக்கு வழக்குகள் கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தை நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் தற்போது உள்ள பணியாளர்களைக் கொண்டு செயல்படுத்துவது இயலாததாகையால், இப்பணியை செய்வதற்கு தேர்ச்சி பெற்ற நபர்கள் தேவை என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும் இப்பணியின் அளவினை மதிப்பீடு செய்ததில் இரண்டாம்நிலை நகராட்சியிலிருந்து சிறப்புநிலை நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் வரை ஒரு லட்சத்திலிருந்து எட்டு லட்சம் பதிவேடுகள் வரை கையாள வேண்டியிருக்கும் எனவும், உள்ளாட்சி நிறுவனங்களில் புதிய பணியிடங்களை தோற்றுவிப்பதற்கான தடை உள்ளதால் சென்ற இருபதாண்டுகளாக எந்த புதிய

பணியிடங்களும் தோற்றுவிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்பேரிலும், மத்திய அரசின் பத்தாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்பேரிலும், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதி பொறுப்புரிமை ஒப்படைப்பு (Devolution) செய்த பின்னர் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களின் வளர்ச்சிப் பணிகளும் நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன. இச்சூழ்நிலையில் கணிப்பொறிமயமாக்கும் பணியை கூடுதலாக மேற்கொள்வதென்பது நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களிலோ, மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகங்களிலோ அல்லது நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திலோ இயலாத ஒன்று எனவும், இப்பணியை நிறைவேற்ற குறைந்தபட்ச பணியிடங்களைத் தோற்றுவித்து அவற்றில் தகுதிவாய்ந்த பணியாளர்களை நியமனம் செய்தாலன்றி கணிப்பொறி மயமாக்குவதற்கான அனைத்து முயற்சிகளும் தோல்வியுறும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. எனவே நகராட்சி நிர்வாகத்தில் கணிப்பொறியாக்கும் பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் பின்வரும் கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிக்குமாறு அரசிடம் வேண்டியுள்ளார்:—

| பணியிடம் வழங்கக் கோரும் அலுவலகத்தின் பெயர் | பணியிடங்களின் பெயர் | | |
|---|---|---|---|
| | திட்ட ஆராய்வாளர் (System Analyst) | கணிப்பொறி திட்ட அமைப்பாளர் (Computer Programmer) | புள்ளிவிவரக் குறிப்பாளர் (Data Entry Operator) |
| நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் | 1 | 3 | 2 |
| மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகங்கள் – 7 | 7 (ஒவ்வொரு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கும் ஒரு பணியிடம் வீதம்) | – | 7 |
| சிறப்பு நிலை, தேர்வுநிலை மற்றும் முதுநிலை நகராட்சிகள் –77 | – | 77 (ஒவ்வொரு நகராட்சிக்கும் ஒரு பணியிடம் வீதம்) | 77 |
| இரண்டாம் நிலை நகராட்சிகள்–25 | – | 25 (ஒவ்வொரு நகராட்சிக்கும் ஒரு பணியிடம் வீதம்) | – |

இப்பணியிடங்களை தோற்றுவிக்க ஆகும் மொத்தச் செலவு கணக்கிடப்பட்டு ரூ.2,09,55,660–ஆக இருக்கும் என குறிப்பிட்டுள்ளார். மேலும் புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கான செலவினங்கள் அப்பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின்

மான்ய நிதியிலிருந்து கொடுக்கப்படும் என்றும், இரண்டாம் வருடத்திலிருந்து செலவினங்கள் மாநில நிதி ஆணைய பரிந்துரைகளின்படி மாநில அரசு அளித்துள்ள பொறுப்புரிமை ஒப்படைப்பின்படி (Devolution) நகர்புற உள்ளாட்சி மையங்களே ஏற்றுக்கொள்ளும் என்றும், தகுந்த விகிதத்தில் பொறுப்புரிமை ஒப்படைப்பிலிருந்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அலுவலகங்களில் நியமனம் செய்யப்படுபவர்களுக்கான செலவினங்களுக்கான தொகை குறைத்துக்கொள்ளப்படும் என நகராட்சி நிர்வாக ஆணையர் கூறியுள்ளார்.

4. நகராட்சி நிர்வாக ஆணையரின் மேற்காணும் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவை ஏற்று நகராட்சி நிர்வாகத்தில் கணிப்பொறி மயமாக்கும் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு கீழ்க்காணும் பணியிடங்களை ஆணையிட்ட தேதியிலிருந்து ஓராண்டிற்கு தற்காலிகமாக தோற்றுவிக்கலாம் என அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது:-

| பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும் அலுவலகங்களின் பெயர் | பணியிடங்களின் பெயர் | | | |
|---|---|---|---|---|
| | புள்ளிவிவர குறிப்பாளர் (Data Entry Operator) ரூ.3200-85-4900 சம்பள விகிதம்) | உதவி திட்ட அமைப்பாளர் (Assistant Programmer) (ரூ.5500-175-9000 சம்பள விகிதம்) | திட்ட அமைப்பாளர் (Programmer) (ரூ.6500-200-11100 சம்பள விகிதம்) | திட்ட ஆராய்வாளர் (System Analyst) (ரூ.8000-275-13500) |
| நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் | 2 | 1 | | 1 |
| மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகங்கள் – 7 | 7 (ஒவ்வொரு அலுவலகத்திற்கும் ஒரு பணியிடம் வீதம்) | | 7 | |
| நகராட்சிகள் – 102 | 50 | 102 (ஒவ்வொரு நகராட்சிக்கும் ஒரு பணியிடம் வீதம்) | | |

5. மேலே பத்தி 4-ல் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு நியமனம் செய்வதற்கான நபர்களின் கல்வித் தகுதி மற்றும் நியமன முறை பற்றி தனியாக ஆணை வெளியிடப்படும்.

6. இந்தப் பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கான செலவினங்கள் அப்பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடத்திற்கு தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியின் மான்ய

நிதியிலிருந்து கொடுக்கப்படும் எனவும், இரண்டாம் வருடத்திலிருந்து செலவினங்களை மாநில நிதி ஆணைய பரிந்துரைகளின்படி மாநில அரசு அளித்துள்ள பொறுப்புரிமை ஒப்படைப்பின்படி (Devolution) நகர்ப்புற உள்ளாட்சி மையங்களே ஏற்றுக்கொள்ளும் எனவும் ஆணையிடப்படுகிறது. தகுந்த விகிதத்தில் பொறுப்புரிமை ஒப்படைப்பிலிருந்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நியமனம் செய்யப்படுபவர்களின் செலவினங்களின் தொகையை குறைத்துக் கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இந்த ஆணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.80236/Fin/98-1, நாள்.29.10.1998.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.மாலதி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
அனைத்து நகராட்சிகள்.

**நகல்**

நிதித்துறை, சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (அந.1 / பொது)துறை, சென்னை-9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சு.இராமசாமி 30/10/98
பிரிவு அலுவலர்.
30/10/98